# பத்திரிக்கை செய்தி குறிப்பு

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வாளகத்தில் அமைந்ததிருக்கும் விழுப்புரம் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் உள்ள உதவி பொறியாளர் அறையில் M-Sand தொழிற்சாலை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு அனுமதி கேட்டு வரும் விண்ணப்பதாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெறுவதாக விழுப்புரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.அ.அமுதா என்பவருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அலுவலகத்தை சோதனை செய்ய விழுப்புரம் ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் அவர்களிடம் கலந்தாலோசித்து இன்று (12.12.2018) மாலை சுமார் 16.30 மணிக்கு ஆய்வு குழுவினர் மேற்படி அலுவலகத்திற்கு சென்று அலுவலகத்தை ஆய்வு செய்தபோது அலுவலகத்தில் இருந்த உதவி பொறியாளர் திரு.கி.நக்கீரன் அமர்ந்திருந்த மேசையின் டிராயரின் கீழே இருந்த மூடு கதவு கொண்ட சிறிய அறையில் இருந்து கணக்கில் வராத தொகை ரூ. 3,50,800 கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகை பற்றி திரு.நக்கீரன் அவர்களிடம் விசாரணை செய்தபோது இந்த தொகை M-Sand தொழிற்சாலை நிறுவ மற்றும் புதுபிக்க அனுமதி கேட்டு விண்ணப்பித்த நபர்களிடம் இருந்து இன்று பெறப்பட்ட லஞ்சத்தொகை என்றும் ஒப்புக்கொண்டார். மேற்படி சம்பவம் தொடடர்பாக துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.அ.அமுதா அவர்கள் M-Sand தொழிற்சாலை நிறுவ மற்றும் புதுபிக்க அனுமதி கேட்டு விண்ணப்பித்த நபர்களிடம் இருந்து கையூட்டு பெற்ற உதவி பொறியாளர் திரு.கி.நக்கீரன், என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி 20.30 மணிக்கு காவல் ஆய்வாளருக்கு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார்மனு தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.சதீஷ் அவர்கள் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 20/2018/AC/VPM, U/s 7 of PC Act-1988 (Amendment) Act-2018 ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றார்.

Scanned by CamScanner